## இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் - 2015

-----------------------------------------------------------------------------

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்து மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 108 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரமான விரிவான அறிக்கையொன்று பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவின் பிரகாரம் தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வயம்ப பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01**

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இடமளிக்கப்படும் சந்தர்ப்பங்கள் தவிர ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 201,145 தொகையான செலுத்த வேண்டிய புலமைப்பரிசில் தொகையில் மாணவர்களுக்கு கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 44,427 தொகை கழிக்கப்பட்டு நிதி நிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03**

நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 451,864,242 தொகையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை மீளத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07**

சொத்தொன்று பயன்பாட்டு நிலைமைக்கு கொண்டு வரப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து அதன் பயன்படு ஆயுட்காலம் முழுமையாக கிரமமான அடிப்படையொன்றில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 2006 மற்றும் 2008 ஆம் ஆண்டுளில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 307,045 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்விற்காக சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

-----------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் அரச மானியங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,918,722,000 ஆக இருந்ததுடன், அம்மானியங்களைப் பயன்படுத்தி கையேற்கப்பட்ட சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கான காலக்கழிவினை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குளியாப்பிட்டிய பௌதீக கல்வித் துறைக்கு களஞ்சிய அறையொன்று அமைக்கும் போது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 73,843 தொகை 2013 திசெம்பர் 15 ஆந் திகதி தீர்க்கப்படும் போது நிறுத்தி வைத்தல் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக கட்டிட கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது,

(ஆ) 2003 பெப்ரவரி முதல் 2015 செப்தம்பர் வரை ரூபா 1,197,000 கூட்டுத்தொகையான வங்கிக்கு நேரடியாக கிடைத்த பெறுவனவுகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 கணக்காய்விற்காக சான்றுகளின்மை**

-------------------------------------------------------------------

ரூபா 1,836,129,051 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பான பட்டோலைகள், நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 45 ஆம் பிரிவு மற்றும் 2005 யூலை 15 ஆந் திகதிய 30 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் ரூபா 29,400,000 தொகை மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 99(1) ஆம் பிரிவு | உயர்கல்வி நிறுவனமென்றிற்குரிய எந்தவொரு மூலத்திலிருந்தோ கிடைக்கப்பெறும் பணம் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு பல்கலைக்கழகத்தின் நிதி தேவைப்பாட்டிற்கு பயன்படுத்த முடியுமான போதிலும், அதற்கு முரணாக பீடத்தின் மூலம் நடாத்தப்படும் சுய நிதியிடல் பாடநெறிகளுக்குரிய 22 கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 82,315,865 கூட்டுத்தொகை ஏனைய பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை IX ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பந்தி

அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களினால் அலுவலக நேரத்திலேயே அலுவலகமல்லாத வேலைகளை நிறைவேற்றுவதற்காக கிடைக்கப் பெறும் கட்டணத்திலிருந்து 10 சதவீதமான அளவு திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், நிரந்தர கல்விப் பதவியணியிக்குரிய விரிவுரையாளர்கள் அப்பல்கலைக்கழகத்திலே வேறு பீடங்களில் வெளிவாரி விரிவுரையாளர்களாக சேவை புரிந்து உழைத்த வருமானத்திலிருந்து மேற்குறித்ததன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 770 மற்றும் 772

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சியங்களில் ரூபா 810,384 பெறுமதியான 120 பொருள் உருப்படிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத இருப்பாகவும், ரூபா 1,529,503 பெறுமதியான 51 பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பொருட்களாகவும் இனங் காணப்பட்டிருந்ததுடன் அப்பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 17,932 பெறுமதியான நானாவித கடன்பட்டோர் மற்றும் ரூபா 261,867 பெறுமதியான விடுதிக்கட்டணம் என்பன 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டன.

(ஆ) 02 ஆண்டுகள் முதல் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் ரூபா 29,097,110 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மற்றும் நிறுத்தி வைத்தல் மற்றும் வைப்பு மீதிகள் மற்றும் ரூபா 691,987 ஆன ஏனைய பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 06 பொறுப்பு விடயங்கள் என்பவற்றை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டில் வேலை பூர்த்தி செய்து கையளிக்கப்பட்ட மாகந்துர விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தின் இரண்டாம் கட்டம் மற்றும் குளியாப்பிட்டி வர்த்தக கல்வி மற்றும் நிதிப்பீடத்தின் I ஆம் கட்டத்திற்காக முறையே ரூபா 7,575,176 தொகை மற்றும் ரூபா 3,638,359 தொகைக்காக செலுத்த வேண்டிய பணம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளித்தரப்பினருக்கு செலுத்தப்பட்ட 17 ஆண்டுகள் பழைமையான ரூபா 386,045 தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்குகளில் காணப்படும் 01 ஆண்டிற்கு மேற்பட்ட, 02 ஆண்டுகள் மற்றும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முறையே ரூபா 409,698 தொகை, ரூபா 697,516 தொகை மற்றும் ரூபா 935,641 பெறுமதியான தொகைகளை தீர்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 140,081,000 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 101,915,000 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறையில் ரூபா 38,166,000 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் செலவினத்திற்கான அரச மானியங்கள் ரூபா 145,242,000 தொகையால் அதிகரித்திருந்த போதிலும், ஊழியர் ஊதியம் மற்றும் பெறுமானத்தேய்வு என்பன முறையே ரூபா 115,979,000 ஆலும் ரூபா 55,042,000 ஆலும் அதிகரித்தமை பற்றாக்குறை அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடங்களிலும் ஒவ்வொரு கல்வியாண்டின் போதும் அனுமதிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கு இடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. 2013/2014 கல்வியாண்டு தொடர்பில் பிரயோக விஞ்ஞான பீடத்தின் அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 200 ஆக இருந்த போதிலும், உள்ளவாறாக சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 182 ஆக இருந்தனர். கால்நடை வளங்கள் கடற்றொழில் மற்றும் போசணை விஞ்ஞான பீடத்தின் அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 170 ஆக இருந்த போதிலும் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 100 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மாணவர் அனுமதி முறையான நடைமுறையொன்றில் இடம்பெறாததன் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையைச் சேர்த்துக்கொள்வதற்கு மேல்மட்ட முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்த 05 மாணவர் விடுதிகளுக்காக 2015 ஆம் ஆண்டின் போது கட்டளையிடப்பட்ட ரூபா 10,728,976 பெறுமதியான Bunkbed மற்றும் உபகரணங்கள் பெற்றுக்கொள்ளாததன் காரணமாக அவ்விடுதிகளை மாணவர்களின் பயன்பாட்டிற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) ஒவ்வொரு பாடநெறியின் கட்டணம் அறவிடப்படும் முறை பாடநெறியிலிருந்து பாடநெறிக்கு வேறுபடுவதாக இருந்தமையால் அக்கட்டணம் பகுதி பகுதியாகவும் ஒரே தடவையில் அறவிடப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதாலும் அவற்றின் தேவைப்பாடு இனங்காணக்கூடிய வகையில் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம் மற்றும் கால்நடை வளங்கள், கடற்றொழில் மற்றும் போசணை விஞ்ஞான பீடத்திற்காக

வெளிவாரி விரிவுரையாளர்கள் ஆட்சேர்க்கப்படும் போது விரிவுரை மணித்தியாலங்கள், வெளிக்கள மணித்தியாலங்கள் மற்றும் செய்முறை மணித்தியாலங்கள் என்பன வெவ்வேறாக திட்டமிடப்படாதிருந்ததுடன் கொடுப்பனவு செய்யும் போது அங்கீகரிக்கப்பட்ட விரிவுரை மற்றும் செய்முறை மணித்தியாலங்களின் எண்ணிக்கை நிறைவேற்றப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கைக்கு இடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஈ) கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,647,590 பெறுமதியான பொருட்கள் பல்கலைக்கழகத்தின் இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்கலைக்கழகத்தின் காணிகளின் உரித்து

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குளியாப்பிட்டி வளவில் அமைந்துள்ள 992 ஆம் இலக்க திட்டவரைபடத்தின் 452 ஆம் இலக்க கூறும், வென்னப்புவ வளாகத்தில் அமைந்துள்ள 4490 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 1.2.7 ஆம் இலக்க கூறும், மாகந்துரை வளவில் அமைந்துள்ள 10661 ஆம் வரைபட இலக்கத்திற்கும் கையேற்பு சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகந்துரை வளாகத்தின் 5 ஏக்கர் காணிக்காக ரூபா 10 மில்லியன் தொகை தென்னை ஆராய்ச்சி நிறுவகத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக விற்பனை உறுதியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) பல்கலைக்கழகத்தினால் 06 திட்ட வரைபடங்களின் கீழ் 09 கூறுகளின் உரித்தைப் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், அதற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படாதிருந்ததுடன், அக்காணித் துண்டுகளின் பெறுமதி வெவ்வேறான மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------

கால்நடை வளங்கள், கடற்றொழில் மற்றும் போசணை விஞ்ஞான பீடத்தின் கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,484,494 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் நிர்மாணங்களுக்காக 05 ஒப்பந்தங்களை பூர்த்தி செய்வதற்காக 09 மாதங்கள் முதல் 23 மாதங்கள் வரையான தாமதம் ஏற்பட்டிருந்த போதிலும் அதற்காக தாமதக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவியணியினருக்கும் 500 மாணவர்களுக்கும் ஒரே தடவையில் வசதிகள் வழங்குவதற்காக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை கட்டிடம் மதியுரைக் கம்பனியால் 8392 சதுர அடி அளவினை ரூபா 45 மில்லியன் மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தில் நிர்மாணிப்பதற்கு (கிரயம் திருத்தப்படாமல் இருப்பதன் கீழ்) அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முழுக் கட்டிடத்திற்குமாக 2012 திசெம்பர் 19 ஆந் திகதி ஆரம்பமாக ரூபா 38,000,000 கிரயத்தில் மதிப்பீடென்று தயாரிக்கப்பட்டிருக்கையில் மீண்டும் அது முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது என முறையே ரூபா 20,000,000 ரூபா 14,400,000 மற்றும் ரூபா 21,900,000 என அதாவது ரூபா 56,300,000 இற்கு 3 கட்டங்களின் கீழ் வேறாக்கப்பட்டு மதிப்பீட்டுத் தொகை அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ii) பல்கலைக்கழகத்தினால் மதியுரைக் கம்பனியின் இணக்கப்பாட்டுடன் கட்டிடத்தின் முதலாவது கட்டத்திற்காக ரூபா 20,000,000 இற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கையில் கொள்வனவுச் செயற்பாட்டிற்காக ரூபா 34,000,000 இற்கு திருத்திய மதிப்பீடொன்று அடிப்படையாக கொள்ளப்பட்டிருந்தது.

(iii) முழுக் கட்டிடத்திற்குமாக ரூபா 38,000,000 ஆன ஆரம்ப கிரய மதிப்பீடு எவ்வித காரணமொன்றும் காட்டப்படாமல் முதலாவது கட்டத்தின் கிரயம் மாத்திரம் ரூபா 34,000,000 ஆக திருத்தம் செய்யப்பட்டமையால் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 70,300,000 ஆக இருந்த காரணத்தினால் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த ரூபா 45,000,000 ஆன செலவின எல்லை ரூபா 25,300,000 ஆல் மிகைத்திருந்தது.

(iv) இக் கிரய திருத்தங்களுக்குரிய 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 02/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கிரய மதிப்பீட்டு பரிசோதனைக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) முழுக் கட்டிடத்திற்குமாக ரூபா 2,280,000 ஆன கட்டணமொன்றை மதியுரைக் சேவைகள் வழங்குவதற்காக செலுத்துதற்கு இணங்கியிருந்த போதிலும், இவ்வாறு கிரய திருத்தங்களினால் அது ரூபா 4,218,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

(vi) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதியுரைக் கம்பனியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் குறைந்த விலை சமர்ப்பித்த ஒப்பந்தக்காரருடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் குறைந்த விலை நிராகரிக்கப்பட்டு இரண்டாவது குறைந்த விலை பரிந்துரைக்கப்பட்டிருந்தமையால் ரூபா 7,988,576 ஆல் ஒப்பந்தத்தின் பெறுமதி அதிகரித்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கையின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நீண்டகால தொலைநோக்குடன் குறித்த அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் இலக்கிடப்பட்ட செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் அச்சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 3,500,000 தொகையில் மதிப்பிடப்பட்ட 03 செயற்திட்டங்களுக்கு நிதிஏற்பாடு கிடைக்காததன் காரணமாக செயற்படுத்துவதற்கு முடியாமல் போயிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்ட 06 செயற்திட்டங்கள் நிதிஏற்பாட்டினை மிகைத்து ரூபா 17,337,712 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அது 11 சதவீதத்திலிருந்து 83 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டில் காணப்பட்ட 50 விடயங்களுக்கு ரூபா 71,913,000 ஆன மிகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் 29 செலவின விடயங்களுக்கு பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 52,807,000 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் 02 செலவின விடயங்களில் ரூபா 850,000 தொகை 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் தகவல் தொழில்நுட்ப மற்றும் அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான ரூபா 12,926,804 தொகையான மொத்த நிதி ஏற்பாட்டுத் தொகையும் சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.3 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம், உரிய ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஒப்பந்த நிர்வாகம் | தாமதத்திற்காக தாமதக் கட்டணம் அறவிடப்படாமல் தொடர்ந்தும் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | கல்விசார் பிரிவில் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் வெளிவாரி விரிவுரையாளர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதன் காரணமாக அதிகளவு கிரயமொன்று மேற்கொள்ள நேர்ந்திருந்தது. |